සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
**Department of Education - Western Province**

දෙවන වාර ඇගයීම2018 -
இரண்டாந் தவணை மதிப்பீடு - 2018
Second Term Evaluation2018 -

| | | | |
|---|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade 08 | විෂයය / பாடம் / Subject **சைவநெறி** | පත්‍රය / வினாத்தாள் / Paper I,II | පැය / மணித்தியாலம் / Hours 02 |

නම
பெயர்
Name

## பகுதி I

**பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்க.**

1. பிரணவத்தின் சொரூபமாய் அமர்ந்திருப்பவர்,
   (i) சிவன் (ii) விஷ்ணு (iii) விநாயகர் (vi) முருகன்
2. நாள் மங்கலம் எனப்படுவது,
   (i) பிறந்தநாள் (ii) மனை புகும் நாள் (iii) பூப்புனித நாள்
   (iv) உபநயனச் சடங்கு நாள்
3. இறைவனின் அருகில் வசித்தல் குறிப்பது,
   (i) விரதம் (ii) உபவாசம் (iii) நோன்பு (iv) தவம்
4. நஞ்சுண்ட கதையை எடுத்துக் கூறும் திருப்பாடல்,
   (i) 'வந்த காலன் தன் ஆருயிரதனை (ii) 'எடுத்தவன் தருக்கை'
   (iii) 'கங்கையைச் சடையில் வைத்தாய்' (iv) 'கரிய கறைக் கண்டன் ....'
5. கண்ணப்ப நாயனார் வழிபட்ட இறைவன் திருநாமம்,
   (i) குடுமித்தேவர் (ii) சோமசுந்தரர் (iii) தியாகேசர் (iv) கங்காதரர்
6. "குனித்த புருவமும்…' என்ற பதிகம் பாடப்பட்ட தலம்,
   (i) சிதம்பரம் (ii) திருமறைக்காடு (iii) திருவையாறு (iv) திருப்பைஞ்ஞீலி
7. சுந்தர மூர்த்திநாயனார் பாடிய திருமுறை.
   (i) இரண்டாந் திருமுறை (ii) மூன்றாந் திருமுறை
   (iii) ஐந்தாந் திருமுறை (iv) ஏழாந் திருமுறை
8. ஆலயங்களில் மின்காந்த அலைகளை ஈர்க்கும் சக்தியைக் கொண்டமைந்தவை,
   (i) கோபுரம் (ii) விமானங்கள் (iii) கருவறை (iv) கலசங்கள்
9. நரசிங்கமுனையரின் வளர்ப்புப் பிள்ளையாக வளர்ந்தவர்,
   (i) சம்பந்தர் (ii) அப்பர் (iii) சுந்தரர் (iv) மாணிக்கவாசகர்
10. குருசீடமுறையில் தமது கற்பித்தலை மேற்கொண்ட சைவப் பெரியார்,
   (i) சுவாமிவிபுலாந்தர் (ii) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
   (iii) சிவபாதசுந்தரனார் (iv) சேர்.பொன். இராமநாதன் (1x 10 = 10 புள்ளிகள்)

**தொடர்புபடுத்துக.**

| | | |
|---|---|---|
| 11. | பெருகலாந் தவம் | கண்ணப்பர் |
| 12. | மாணிக்கவாசகர் | பங்குனி உத்தரம் |
| 13. | தீவிர பக்தி | திருமுறைகள் |
| 14. | சிவசக்தி ஐக்கியம் | ஊமையைப் பேசவைத்தமை |
| 15. | தெய்வீக உணர்வு | திருமருகல் |

( 2x 5 = 10 புள்ளிகள்)

**சரியான விடையைத் தெரிவுசெய்து இடைவெளி நிரப்புக.**

| | | |
|---|---|---|
| மேடராசியில் | சிவகோசரியார் | சுவாதிஸ்டானம் |
| இதிகாசக் | பெற்றோருக்கு | |

16. எமது உடலின் ஆறு ஆதாரங்களுள் ………………………………………. ஒன்று.

17. திருக்காளத்தியப்பருக்கு ஆகம முறையில் …………..………………………. பூசை செய்தார்.

18. நாம் ……………………………….நன்றிக் கடன்பட்டவர்கள்.

19. நாயன்மார் தமது பாடல்களில் ……………………………………. கதைகளையும் கையாண்டுள்ளனர்

20. சூரியன் ………………………….. பிரவேசிக்கும் நாளே புதுவருடப் பிறப்பாகும்.

(2 x 5 = 10 புள்ளிகள்)

**சரியாயின் சரி (√) எனவும், பிழையாயின் (×) எனவும் அடைப்புக் குறிக்குள் எழுதுக.**

21. நாள் மங்கல நிகழ்வை அனாதை இல்லத்தில் கொண்டாடுவது சிறப்பானது. (…..)

22. “காப்பதோர் வில்லும் அம்பும்…….” என்ற பதிகத்தை சம்பந்தர் பாடினார். (…..)

23. விரத காலங்களில் அகப்புறத் தூய்மையைக் கடைப்பிடிக்கக் கூடாது. (…..)

24. கோயில் என அழைக்கப்படும் தலம் திருக்கேதீஸ்வரம். (…..)

25. சைவப் பெரியார் சிவபாதசுந்தரனார் மிருகப் பலியிடலை எதிர்த்தார். (…..)

(2 x 5 = 10 புள்ளிகள்)

## பகுதி II

**முதலாம், இரண்டாம் வினாக்கள் உட்பட எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. வினாக்களுக்கு விடை எழுதுக

   (i) நாம் ஆலயத்தை எத்தனை முறை வலம்வர வேண்டும்?

   (ii) புத்தர் பெருமான் பரிநிர்வாணம் அடைந்த தினத்தைக் குறிப்பிடுக.

   (iii) பண்டிகை கொண்டாடுவதால் ஏற்படும் பயன்கள் இரண்டு எழுதுக.

   (iv) மாணிக்கவாசகர் அருளிய நூல்கள் இரண்டைக் குறிப்பிடுக.

   (v) சைவப் பெரியார் சிபாதசுந்தரனார் பிறந்த இடத்தைப் பெயரிடுக.

(2 x5= 10 புள்ளிகள்)

2. பின்வரும் திருப்பாடல்களில் இருந்து இரண்டினைத் தெரிவுசெய்து வரிக்கிரமமாக எழுதுக.

i. "பண்ணினேர் மொழி……."

ii. "நீள நினைந்தடியேன் ……."

iii. "காப்பதோர் வில்லும் ……."

iv. "கற்றாங்கரியோம்பி……."

v. "மண்ணில் நல்ல வண்ணம் ……."

(2 x 10 = 20 புள்ளிகள்)

**3. "ஆலயம் ஆன்மா லயப்படும் இடமாகும்."**

i. ஆலயத்திற்குச் செல்வதால் ஏற்படும் பயன்கள் இரண்டைத் தருக. (2 புள்ளிகள்)

ii. ஆலயத்தில் இடம்பெறும் கிரியைகள் எவை? கர்ப்பக்கிரகம் மனித உடலின் எப்பகுதியைக் குறிக்கிறது? (4 புள்ளிகள்)

iii. ஆலயத்தில் செய்யத்தகாத செயல்கள் நான்கினைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

**4. "முத்திபெற வழிகாட்டுவது விரதமாகும்"**

i. விரதம் என்பதன் பொருளை விளக்குக. (2 புள்ளிகள்)

ii. விரதம் அனுட்டிக்கும்போது கடைப்பிடிக்கும் செயற்பாடுகள் நான்கை எழுதுக. (4 புள்ளிகள்)

iii. விரதத்தின் பயன்கள் நான்கினைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

**5. "மக்கள் சேவையே மகேசன் சேவை"**

i. தேவார முதலிகள் யாவர் ? இவர்கள் பாடிய திருமுறைகளை எவ்வாறு அழைப்பர்?

(4 புள்ளிகள்)

ii. ''பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன்'' என அழைக்கப்படும் நாயனார் யார்?

(2 புள்ளிகள்)

iii) சுந்தரமூர்த்தி நாயனார் செய்த அற்புதங்கள் நான்கினை வரிசைப்படுத்துக. (4 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

**6. "பட்டி பெருகவேண்டும் தம்பிரனே"**

i. எமது வழிபாட்டு முறைகள் எத்தனை? அவை எவை? (3 புள்ளிகள்)

ii. நாட்டார் வழிபாட்டுத் தெய்வங்கள் குடியிருக்கும் இடங்கள் நான்கைக் குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

iii. நாட்டார் தெய்வம் ஒன்றைக் குறிப்பிட்டு, வழிபடப்படும் முறையையும் விளக்குக.

(3 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

7. பின்வரும் தலைப்புக்களில் இருந்து இரண்டினைத் தெரிவுசெய்து **ஐந்து** வாக்கியங்கள் எழுதுக.

i. கண்ணப்பநாயனார்

ii. உகந்தை முருகன் ஆலயம்

iii. புது வருடப்பிறப்பு

iv. திருநாவுக்கரசர்

(2 x5= 10 புள்ளிகள்)